## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## நான்காம் பத்து

### முதல் திருமொழி - போதலர்ந்த
### திருநாங்கூர்த் திருப்பதி 11
### 4. திருத்தேவனார்தொகை

** போதலர்ந்த பொழிற் சோலைப் * புறம் எங்கும் பொரு திரைகள் *
தாதுதிர வந்தலைக்கும் * தடமண்ணித் தென்கரை மேல் *
மாதவன் தான் உறையும் இடம் * வயல் நாங்கை * வரி வண்டு
தேதென என்று இசை பாடும் * திருத்தேவனார் தொகையே 1

யாவருமாய் யாவையுமாய் * எழில் வேதப் பொருள்களுமாய் *
மூவருமாய் முதலாய * மூர்த்தி அமர்ந்து உறையும் இடம் **
மா வரும் திண்படை மன்னை * வென்றி கொள்வார் மன்னு நாங்கை *
தேவரும் சென்று இறைஞ்சு பொழில் * திருத்தேவனார் தொகையே 2

வானாடும் மண்ணாடும் * மற்றுள்ள பல்லுயிரும் *
தானாய எம்பெருமான் * தலைவன் அமர்ந்து உறையும் இடம் **
ஆனாத பெருஞ்செல்வத்து * அருமறையோர் நாங்கை தன்னுள் *
தேனாரும் மலர்ப் பொழில் சூழ் * திருத்தேவனார் தொகையே 3

இந்திரனும் இமையவரும் * முனிவர்களும் எழில் அமைந்த *
சந்த மலர்ச் சதுமுகனும் * கதிரவனும் சந்திரனும் **
எந்தை எமக்கு அருள் என நின்று * அருளும் இடம் எழில் நாங்கை *
சுந்தர நற்பொழில் புடை சூழ் * திருத்தேவனார் தொகையே 4

அன்டமும் இவ்வலை கடலும் * அவனிகளும் குலவரையும் *
உண்ட பிரான் உறையும் இடம் * ஒளிமணி சந்து அகில் கனகம் **
தெண்திரைகள் வரத் திரட்டும் * திகழ் மண்ணித் தென்கரை மேல் *
திண்திறலார் பயில் நாங்கைத் * திருத்தேவனார் தொகையே 5

ஞாலம் எல்லாம் அமுது செய்து * நான்மறையும் தொடராத *
பாலகனாய் ஆலிலையில் * பள்ளி கொள்ளும் பரமன் இடம் **
சாலி வளம் பெருகி வரும் * தடமண்ணித் தென்கரை மேல் *
சேல் உகளும் வயல் நாங்கைத் * திருத்தேவனார் தொகையே 6

ஓடாத ஆளரியின் * உருவாகி இரணியனை *
வாடாத வள்ளுகிரால் * பிளந்து அளைந்த மாலதிடம் **
ஏடேறு பெருஞ்செல்வத்து * எழில் மறையோர் நாங்கை தன்னுள் *
சேடேறு பொழில் தழுவு * திருத்தேவனார் தொகையே 7

வாராரும் இளங்கொங்கை * மைதிலியை மணம் புணர்வான் *
காரார் திண்சிலை இறுத்த * தனிக் காளை கருதும் இடம் **
ஏராரும் பெருஞ்செல்வத்து * எழில் மறையோர் நாங்கை தன்னுள் *
சீராரும் மலர்ப் பொழில் சூழ் * திருத்தேவனார் தொகையே 8

கும்ப மிகு மத யானை * பாகனொடும் குலைந்து வீழ *
கொம்பதனைப் பறித்து எறிந்த * கூத்தன் அமர்ந்து உறையும் இடம் **
வம்பவிழும் செண்பகத்தின் * மணம் கமழும் நாங்கை தன்னுள் *
செம்பொன் மதிள் பொழில் புடை சூழ் * திருத்தேவனார் தொகையே 9

** காரார்ந்த திருமேனிக் * கண்ணன் அமர்ந்து உறையும் இடம் *
சீரார்ந்த பொழில் நாங்கைத் * திருத்தேவனார் தொகை மேல் **
கூரார்ந்த வேற்கலியன் * கூறு தமிழ் பத்தும் வல்லார் *
ஏரார்ந்த வைகுந்தத்து * இமையவரோடு இருப்பாரே 10

**அடிவரவு:** போது யாவரும் வானாடும் இந்திரனும் அண்டமும் ஞாலம் ஓடாத வாராரும் கும்பம் காரார்ந்த கம்பமா

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**